புதுயுகம்



ஸ்ரீராம்
இலக்கியக் கழகம்



திருக்குறள்
விழா 2026

145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004.

தொலைபேசி: 044 – 4021 4100

# மாணவர்களுக்கான பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்

அன்புடையீர்

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் “திருக்குறள் விழா”வினை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது. இவ்விழாவின் ஒரு பகுதியாக, மாணவர்களிடையே திருக்குறளின் கருத்துக்களைப் பரப்பவும், பேச்சாற்றலைப் பெருக்கவும், வரையும் திறனை வெளிப்படுத்தவும், எழுத்தார்வத்தைத் தூண்டவும் மாநில அளவில் பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துகிறது.

இப்போட்டிகள், நடப்பாண்டில் ஜூலை – ஆகஸ்ட் மாதங்களில் – சேலம், வேலூர், திருவாரூர், புதுச்சேரி, ஈரோடு, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சென்னை, தாம்பரம் ஆகிய 12 மையங்களில் நடைபெறவுள்ளன. இடைநிலை, மேல்நிலை, கல்லூரி ஆகிய மூன்று பிரிவுகளில் இவை நடத்தப்படும். இந்நிகழ்வுக்கு ஊடகப் பங்குதாரராக கைகோர்த்துள்ள புதுயுகம் தொலைக்காட்சி, நவம்பர் 2026 முதல் ஜனவரி 2027 வரை இந்நிகழ்ச்சியை தொலைக்காட்சி மற்றும் யூ-டியூபில் ஒளிபரப்பும்.

இடைநிலை / மேல்நிலை / கல்லூரி என ஒவ்வொரு பிரிவிலும் மாணவ, மாணவியருக்கு கீழ்க்காணும் முறையில் போட்டிகள் நடத்தப்படும்.

## பேச்சுப் போட்டி

- பேச்சுப் போட்டியின் கால் இறுதிச் சுற்றானது, காலை 10.30 மணி முதல் பகல் 12.30 மணி வரை நடைபெறும். இதில் பங்கு பெறும் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, வேறுவேறு வகுப்பறைகளில் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்வர். அங்கு ஒவ்வொரு மாணவருக்கும் தலா 5 நிமிடங்கள் பேச வாய்ப்பளிக்கப்படும். ஒவ்வொரு வகுப்பறையிலும் முதல் இரண்டு போட்டியாளர்கள் அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்படுவர்.

- பேச்சுப் போட்டியின் கால் இறுதிச் சுற்றில் வென்றோர், அரை இறுதிச் சுற்றிலும் அதே தலைப்பில் பேசலாம்.

- அரை இறுதிச் சுற்றானது, பகல் 1 மணி முதல் 2.30 மணி வரை நடைபெறும். போட்டியில் வென்றோர் விவரம், பகல் 3 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவின்போது தெரிவிக்கப்படும். அரை இறுதிச் சுற்றில் முதல் இடம் பெறுபவர், சென்னையில் நடக்கும் இறுதிச் சுற்றுக்கு அழைக்கப்படுவார். அரை இறுதிச் சுற்றில் பங்கேற்கும் அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

- இறுதிச் சுற்றில் ஒவ்வொரு மையத்திலும், ஒரு பிரிவிற்கு தலா ஒருவர் வீதம், 12 மையங்களிலிருந்து முகிழ்த்தெழும் 12 போட்டியாளர்கள் கலந்து கொள்வர். அவர்களில் இருந்து மூன்று பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ஒவ்வொரு பிரிவிலும் இறுதிச் சுற்றில், மாநில அளவில் முதல் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 15,000, இரண்டாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 10,000, மூன்றாம் பரிசு பெறும் மாணவருக்கு ரூ. 7,500 ஆகிய பணப் பரிசுகளும், கோப்பைகளும் வழங்கப்படும்.

- கருத்து, வெளியிடும் பாங்கு, உச்சரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், மாணாக்கர்களின் பேச்சு மதிப்பீடு செய்யப்படும்.

- போட்டியின் போது மாணவர்கள் குறிப்புகளைப் பயன்படுத்தக் கூடாது.

- ஆசிரியர்கள், ஒரே உரையைத் தயாரித்து பல மாணவர்களுக்கு கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## ஓவியப் போட்டி

- இப்போட்டிகள், ஒரே சுற்றாக மண்டல அளவில் மட்டுமே நடத்தப்படும். தோராயமாக, காலை 10.30 மணி முதல் பகல் 12 மணி வரை 90 நிமிடங்கள் நடைபெறும்.
- ஸ்ரீராம் இலக்கியக் கழகம், A3 அளவுள்ள வரைபடத் தாளை வழங்கும். பென்சில், வண்ணம் உள்ளிட்ட - ஓவியம் வரைவதற்கு தேவைப்படும் அனைத்துப் பொருள்களையும் போட்டியாளர்களே கொண்டு வரவேண்டும்.
- பென்சில், வாட்டர் கலர், சார்க்கோல், ஸ்கெட்ச் என எல்லாவிதமான ஓவியங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- ஜிகினா, வண்ணப் பொடி, பூ, ஸ்டிக்கர் பொட்டு என எந்த உபரிப் பொருளையும் ஓவியத்தில் பயன்படுத்தக்கூடாது.
- ஓவியங்கள் தலைப்பின் உட்கருத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.
- மாணவர்கள், மாடல் ஓவியங்களைப் பார்க்காமல் வரைய வேண்டும்.
- கருத்து, வண்ணங்களைப் பயன்படுத்தும் விதம், வெளிப்படுத்தும் பாங்கு ஆகியவற்றின் அடிப்படையில் பரிசுக்குரிய ஓவியங்கள் தெரிவு செய்யப்படும்.
- போட்டியில் வென்றோர் விவரம், பகல் 3 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவின்போது தெரிவிக்கப்படும்.
- முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு பெறும் மாணவர்களுக்கு கேடயமும், ஆறுதல் பரிசுகள் பெறும் மாணவர்களுக்கு நூல்களும் வழங்கப்படும்.

## கட்டுரைப் போட்டி

- இப்போட்டிகளும் ஒரே சுற்றாக, மண்டல அளவில் மட்டுமே நடத்தப்படும். தோராயமாக, காலை 10.30 மணி முதல் 12 மணி வரை 90 நிமிடங்கள் இப்போட்டிகள் நடைபெறும்.
- மாணவர்கள் அதிகபட்சமாக 12 பக்கங்கள் வரை கட்டுரையை எழுதலாம்.
- கட்டுரைக்கான தாள்களை ஸ்ரீராம் இலக்கியக் கழகம் வழங்கும். அட்டை, பேனா, பென்சில் போன்ற பொருள்களை மாணவர்களே கொண்டு வர வேண்டும்.
- கருத்து, உரைநடை, வெளிப்படுத்தும் பாங்கு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.
- குறிப்புகளைப் பார்க்காமல், மாணவர்கள் கட்டுரையை எழுத வேண்டும்.
- போட்டியில் வென்றோர் விவரம் பகல் 3 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவின் போது தெரிவிக்கப்படும்.
- முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு பெறும் மாணவர்களுக்கு கேடயமும், ஆறுதல் பரிசுகள் பெறும் மாணவர்களுக்கு நூல்களும் வழங்கப்படும்.

## விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி:

சேலம், வேலூர் மையங்களில் பங்கேற்போருக்கு - 11 ஜூலை 2026

திருவாரூர், புதுச்சேரி மையங்களில் பங்கேற்போருக்கு - 18 ஜூலை 2026

ஈரோடு, கோவை மையங்களில் பங்கேற்போருக்கு - 25 ஜூலை 2026

தஞ்சாவூர், திருச்சி மையங்களில் பங்கேற்போருக்கு - 1 ஆகஸ்ட் 2026

மதுரை, திருநெல்வேலி மையங்களில் பங்கேற்போருக்கு - 8 ஆகஸ்ட் 2026

சென்னை, தாம்பரம் மையங்களில் பங்கேற்போருக்கு - 16 ஆகஸ்ட் 2026

நீங்கள் எந்த மையத்தில் பங்கேற்றாலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை "ஸ்ரீராம் இலக்கியக் கழகம், # 145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004" என்ற தலைமை அலுவலக முகவரிக்கே அனுப்ப வேண்டும்.

ஏதேனும் ஐயம் இருப்பின் 044 - 2822 0008 என்ற தொலைபேசி எண்ணில், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

# முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள்:

| நகரம் | நாள் | இடம் |
|---|---|---|
| சேலம் | 18-07-2026 சனி | பாலபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,<br>மரவனேரி பிரதான சாலை, சேலம் – 636 007. தொ.பே.: 0427 – 2902 021. |
| வேலூர் | 19-07-2026 ஞாயிறு | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி,<br>இன்ஃபேன்டரி சாலை, வசந்தபுரம், கொசப்பேட்டை, வேலூர் – 632 001. தொ.பே.: 73391 91858. |
| திருவாரூர் | 25-07-2026 சனி | நியூ பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,<br>37, புதுத்தெரு, திருவாரூர் – 610 001. தொ.பே.: 04366 – 242522. |
| புதுச்சேரி | 26-07-2026 ஞாயிறு | செயின்ட் ஆண்டனி’ஸ் உயர்நிலைப் பள்ளி,<br>சி - 115, மறைமலை அடிகள் சாலை, புதுச்சேரி - 605 001. தொ.பே.: 0413 - 220 3254. |
| ஈரோடு | 01-08-2026 சனி | செங்குந்தர் மேல்நிலைப் பள்ளி,<br>161, மினாட்சி சுந்தரனார் சாலை, தில்லை நகர் கேட், ஈரோடு – 638 001.<br>தொ.பே.: 0424 – 2258 245. |
| கோயம்புத்தூர் | 02-08-2026 ஞாயிறு | சபர்பன் மேல்நிலைப் பள்ளி,<br>101, ராஜாஜி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் – 641 009. தொ.பே.: 0422 – 2230 544. |
| தஞ்சாவூர் | 08-08-2026 சனி | பாரத் அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரி,<br>புதிய பேருந்து நிலையம் அருகில், திருச்சி சாலை, தஞ்சாவூர் – 613 005.<br>தொ.பே.: 04362 – 228 081. |
| திருச்சி | 09-08-2026 ஞாயிறு | இ. ஆர். மேல்நிலைப் பள்ளி,<br>திருச்சி சாலை, மேலசிந்தாமணி, (அண்ணா சிலை அருகில்), திருச்சிராப்பள்ளி – 620 002.<br>தொ.பே.: 0431 – 2703 096. |
| மதுரை | 22-08-2026 சனி | மதுரைக் கல்லூரி,<br>டி.பி.கே.ரோடு, மதுரை - 625 011. தொ.பே.: 0452 – 2673 354. |
| திருநெல்வேலி | 23-08-2026 ஞாயிறு | சாஃப்டர் மேல்நிலைப் பள்ளி,<br>எஸ். என். நெடுஞ்சாலை, திருநெல்வேலி – 627 001. தொ.பே.: 0462 – 2330 885. |
| சென்னை | 29-08-2026 சனி | சி.எஸ்.ஐ. ஜெஸ்ஸி மோசஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,<br>37 / Z - 183, 5-வது அவென்யூ, (ப்ளூ ஸ்டார் பேருந்து நிறுத்தம் அருகில்), அண்ணா நகர், சென்னை – 600 040. தொ.பே.: 044 – 2626 6739. |
| தாம்பரம் | 30-08-2026 ஞாயிறு | வேல்ஸ் வித்யாஷ்ரம்,<br>தர்கா சாலை, பல்லாவரம், சென்னை – 600 043. தொ.பே.: 044 - 22662510. |

## ஸ்ரீராம் சிட்ஸ் அலுவலகங்களின் தொலைபேசி எண்கள்:

| | |
|---|---|
| சேலம் | : 0427 – 4047 501 / 4047 502 |
| வேலூர் | : 98658 87304 |
| திருவாரூர் | : 98658 87650 |
| புதுச்சேரி | : 98658 87634 |
| ஈரோடு | : 0424 – 2250 277 / 2250 288 |
| கோயம்புத்தூர் | : 0422 – 4326 912 / 4378 235 |
| தஞ்சாவூர் | : 0436 – 2278 138 / 98658 87279 |
| திருச்சி | : 0431 – 4210 130 / 4026 996 |
| மதுரை | : 0452 – 4372 145 |
| திருநெல்வேலி | : 98658 87568 / 98658 87869 |
| சென்னை | : 044 – 4021 4100 / 4210 2114 |
| தாம்பரம் | : 044 – 4203 4609 / 99429 90768 |

# விதிமுறைகள்

- போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள், இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, பள்ளி / கல்லூரி முதல்வரின் கையொப்பம் பெற்று, ஸ்ரீராம் இலக்கியக் கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
- இவ்விண்ணப்பத்தில் இணைத்துள்ள அனுமதிச் சீட்டை மாணவர்கள் கத்தரித்து, பூர்த்தி செய்து போட்டிக்கு நேரில் வரும்போது தவறாமல் கொண்டு வரவும்.
- இப்போட்டிகளில், ஒவ்வொரு பள்ளி / கல்லூரியில் இருந்தும் எவ்வளவு மாணவர்கள் வேண்டுமானாலும், கலந்து கொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக விண்ணப்பப் படிவத்தை நகல் எடுத்து, பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
- மூன்று போட்டிகளும் ஒரே நேரத்தில் நடக்கவிருப்பதால், ஒரு மாணவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்க இயலாது.
- அரசு அங்கீகாரம் பெறாத கல்வி நிலையங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் இதில் கலந்து கொள்ள இயலாது.
- முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்ள இயலாது.
- ஸ்ரீராம் குழுமத்தில் பணியாற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
- ஒரு பள்ளி / கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், ஏதேனும் ஒரு மையத்தில் மட்டுமே கலந்து கொள்ளலாம். வேறுவேறு மையங்களில் கலந்து கொள்ளக் கூடாது. உதாரணமாக, காஞ்சிபுரம் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் சென்னை அல்லது தாம்பரம் அல்லது வேலூரில் கலந்து கொள்ளலாம். சிலர் இங்கும், சிலர் அங்குமாகக் கலந்து கொள்ளக் கூடாது. மையத்தைத் தேர்வு செய்வது அக்கல்வி நிறுவனத்தின் விருப்பம்.
- ஒரு மையத்தில் பங்கேற்ற மாணவர், மீண்டும் இன்னொரு மையத்தில் பங்கேற்கக் கூடாது.
- போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் காலை 9.30 மணிக்குள் போட்டி நடைபெறும் மையத்திற்கு வர வேண்டும்.
- போட்டி நடைபெறும் அறைகளுக்குள் பெற்றோர், ஆசிரியர்களுக்கு அனுமதி இல்லை.
- போட்டியில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் எதுவும் கிடையாது.
- போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- போட்டியில் பங்கேற்க வரும் மாணவர்களுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.
- விதிமுறைகளைப் பின்பற்றாத மாணவர்கள் போட்டியில் இருந்து நீக்கப்படுவர்.
- மதிய உணவை மாணவர்களே கொண்டு வரவேண்டும்.

**நடுவரின் தீர்ப்பே இறுதியானது.**

## கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகள்

நேரம்: 90 மணித்துளிகள்

### இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6,7,8)

சொற்காத்துச் சோர்விலாள் பெண் (56)

அல்லது

ஈத்துவக்கும் இன்பம் (228)

அல்லது

பேராண்மை வேண்டு பவர் (962)

### மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9,10,11,12)

துன்பத்துள் துப்பாயார் நட்பு (106)

அல்லது

ஆன்ற பெருமை தரும் (416)

அல்லது

ஆவிற்கு நீரென்று (1066)

### கல்லூரிப் பிரிவு

துன்னற்க தீவினைப் பால் (209)

அல்லது

துன்பம் துடைத்தூன்றும் தூண் (615)

அல்லது

அறிகொன்று அறியான் (638)

## ஓவியப் போட்டிக்கான தலைப்புகள்

நேரம்: 90 மணித்துளிகள்

**இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6,7,8)**

ஊருணி நீர்நிறைந் தற்றே (215)
அல்லது
மற்றைய எல்லாம் பிற (661)
அல்லது
இருப்பாரைக் காணின் (1040)

**மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9,10,11,12)**

பழித்தது ஒழித்து விடின் (280)
அல்லது
நெடும்புனலுள் வெல்லும் (495)
அல்லது
பிழைத்தவேல் ஏந்தல் இனிது (772)

**கல்லூரிப் பிரிவு**

இன்மை புகுத்தி விடும் (616)
அல்லது
குன்றேறி யானைப்போர் (758)
அல்லது
யாதொன்றும் கண்பாடு அரிது (1049)

## பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள்

நேரம்: 5 மணித்துளிகள்

**இடைநிலைப் பிரிவு (வகுப்புகள் 6,7,8)**

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை (137)
அல்லது
பிறவினை எல்லாந் தரும்  (321)
அல்லது
உருவுகண்டு எள்ளாமை (667)
அல்லது
எழுவாரை எல்லாம் பொறுத்து (1032)

**மேல்நிலைப் பிரிவு (வகுப்புகள் 9,10,11,12)**

வாய்மையின் நல்ல பிற (300)
அல்லது
எவ்வ துறைவது உலகம் (426)
அல்லது
அறம்பொருள் இன்பம் (501)
அல்லது
ஆள்வினையும் ஆன்ற அறிவும் (1022)

**கல்லூரிப் பிரிவு**

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று (49)
அல்லது
ஒல்வ தறிவது அறிந்ததன் (472)
அல்லது
தீயெச்சம் போலத் தெறும் (674)
அல்லது
பண்பிலான் பெற்ற (1000)

புதுயுகம்

ஸ்ரீராம் இலக்கியக் கழகம்

திருக்குறள் விழா 2026

145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.

தொலைபேசி: 044 - 4021 4100

**முதல் பகுதி:**

# பேச்சுப் போட்டி / ஓவியப் போட்டி / கட்டுரைப் போட்டிக்கான விண்ணப்பப் படிவம்

மாணவரின் பெயர் ............................................ வகுப்பு ....................

தாய் / தந்தை மொபைல் எண் ............................................

பள்ளி / கல்லூரி (முழு முகவரியுடன்) ............................................

............................................

பின் கோடு .................... தொலைபேசி ....................

பங்கேற்க விரும்பும் போட்டி: ☐ பேச்சு ☐ ஓவியம் ☐ கட்டுரை

கலந்து கொள்ளும் பிரிவு: ☐ இடைநிலை (6,7,8 வகுப்புகள்) ☐ மேல்நிலை (9,10,11,12 வகுப்புகள்) ☐ கல்லூரி

கலந்து கொள்ளும் மையம்:

☐ சேலம் ☐ ஈரோடு ☐ மதுரை
☐ வேலூர் ☐ கோவை ☐ திருநெல்வேலி
☐ திருவாரூர் ☐ தஞ்சாவூர் ☐ சென்னை
☐ புதுச்சேரி ☐ திருச்சி ☐ தாம்பரம்

.................................................... ....................................................

தலைமை ஆசிரியர் / முதல்வர் கையொப்பம் (பள்ளி / கல்லூரி முத்திரையுடன்) மாணவரின் கையொப்பம்

---

கீழ்க்காணும் அனுமதிச் சீட்டை, மாணவர்கள் பூர்த்தி செய்து, கத்தரித்து வைத்துக் கொண்டு போட்டிக்கு வரும் போது கொண்டு வரவேண்டும்.

புதுயுகம்

ஸ்ரீராம் இலக்கியக் கழகம்

திருக்குறள் விழா 2026

145, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.

தொலைபேசி: 044 - 4021 4100

**இரண்டாம் பகுதி:**

# அனுமதிச் சீட்டு

☐ பேச்சுப் போட்டி ☐ ஓவியப் போட்டி ☐ கட்டுரைப் போட்டி

☐ இடைநிலை (6,7,8 வகுப்புகள்) ☐ மேல்நிலை (9,10,11,12 வகுப்புகள்) ☐ கல்லூரி

பெயர் ............................................ நேரம் : காலை 9.30 மணி

பள்ளி / கல்லூரி ............................................